பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 20 | வியாழக்கிழமை | 05.12.2024 | அதிர்வு 125

## “இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன்”

மேதகுவுக்கு வீரவணக்கம் செலுத்திய அர்ச்சுனா எம்.பி.

(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)







# சமஷ்டி தீர்வு கிடைக்குமா?

## புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே கவனம் செலுத்தப்படும் என்று தமிழரசிடம் அநுர தெரிவிப்பு

சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்து புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே கவனத்தில்கொள்ள முடியும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும்யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

04

## ‘13’ தொடர்பில் ரில்வின் ‘பல்டி’



“புதிய அரசமைப்பியில் சிறந்த தீர்வு நடை முறைப்படுத்தப்படும் வரை 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட மாட்டாது. அது தொடர்பில் சகல

03

## ரணில் அரசில் அரசியல் இலஞ்சமாக 361 மதுபான சாலைகளுக்கு அனுமதி

### சிபாரிசு செய்த அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியல் வெளியாகவில்லை

கடந்த அரசில் வடக்கு மாகாணத்துக்கு 32 மதுபான சாலைகளுக்கான அனுமதிகளும், கிழக்கு மாகாணத்துக்கு 22 மதுபான சாலைகளுக்கான அனுமதிகளுமாக மொத்தம் 361 மதுபான சாலைகளுக்கான அனுமதிகள் நாடு முளுவதும் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க,

05







‘புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டும்’ என்பார்கள். ஆனால், புதிய தேசிய மக்கள் சக்தி அரசு அப்படிச் சாதிப்பதாகத் தெரியவில்லை. புதிய அரசு ஆட்சித் துறையில் புதிதாக – திறமையாக – எதுவும் செய்வதாகவும் தெரியவில்லை.

கடனில் மூழ்கி, பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் விழுந்த நாட்டைத் தூக்கி நிறுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தைச் செய்தார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மோசமான நிலையில் கிடந்த நாட்டை பிணையெடுக்க முன்வந்த நாணய நிதியத்துடன் அப்போதைய அரசு செய்த உடன்பாட்டை – இணக்கத்தை – அச்சமயத்தில் எதிரணியில் இருந்தபடி கடுமையாக விமர்சனம் செய்தார் இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

ஆனால் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், முன்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன கொள்கை நிலைப்பாட்டை எடுத்து முடிவுகளைச் செய்தாரோ, அதனையே

05



# இலங்கையர் என்ற அடையாளம் தமிழருக்குப் பேச்சளவில் மட்டுமே

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. ஆதங்கம்

“மனித உரிமை விவகாரத்தில் அரசு வெளிப்படைத்தன்மையான புதிய கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும். நாம் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் இருந்து செயற்படும்போது முறையான உரிமைகள் கிடைக்கப் பெறுகின்றனவா என்பதை ஆராய வேண்டும். ஏனெனில் நாம் இலங்கையர் என்ற அடையாளம் பேச்சளவில் மாத்திரமே உள்ளது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“கடந்த நாடாளுமன்றத்தில் எமது கட்சியும், ஜனாதிபதியின் தேசிய மக்கள் சக்தியும் அப்போதைய ஜனாதிபதியுடன் எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை. பயனற்ற பேச்சுவார்த்தைகளில் பங்குப்பற்றுவதை இருவரும் தவிர்த்தோம்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டுள்ளோம். இனவாதம் மற்றும் மதவாதம் ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறுவதனை ஏற்றுக்கொள்கிறோம். நாங்களும் அதனையே எதிர்பார்க்கின்றோம். உரிமைகளை சிறந்த முறையில் பகிர்ந்தளித்தால் முரண்பாடுகள் தோற்றம் பெறாது.

எமது கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) இலங்கையர் என்ற அடையாளத்தை நம்பியுள்ளது. இருப்பினும் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் இருந்து செயற்படும்போது முறையான உரிமைகள் கிடைக்கப் பெறுகின்றனவா என்பதை ஆராய வேண்டும். ஏனெனில் இலங்கையர் என்ற அடையாளம் பேச்சளவில் மாத்திரமே உள்ளது

முன்னைய அரசுகள் இனவாதத்தை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இனவாதத்தை வெளிப்படையாக முன்னிலைப்படுத்திச் செயற்பட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. மட்டக்களப்பு – மயிலத்தமடு மேய்ச்சல் தரை அழிக்கப்பட்டு தனித்துவமான குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன.

இலங்கையின் மனித உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டுக்குள் நியாயமான விசாரணைகளை நடத்த முடியாது என்பது சர்வதேச அரங்கில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மனித உரிமை விவகாரத்தில் அரசு வெளிப்படைத்தன்மையான புதிய கொள்கைக்கு அமையச் செயற்பட வேண்டும்.

போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உண்டு. ஜே .வி.பி.யும் தமது உறவுகளை நினைவுகூர்வதைப் போன்று நாங்களும் எம்மவர்களை நினைவுகூருகின்றோம். ஜே.வி.பி மற்றும் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் இலங்கை அரசால் மௌனிக்கப்பட்டது. ஆகவே, அடிப்படைக் காரணிகளுக்குத் தீர்வு காணாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து மாத்திரமல்ல ஒட்டுமொத்த நாட்டில் இருந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக தண்டனைச் சட்டக் கோவையைப் பயன்படுத்த முடியும்.

நீதி அமைச்சர் இனவாதியல்லர், முற்போக்கான சிந்தனையுள்ளவர். அரசியல் கைதிகள் 9 பேர் இன்றும் சிறையில் உள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கைகளை அவர் எடுக்க வேண்டும்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருந்த மொரிஸ் எனும் அரசியல் கைதி அம்பாந்தோட்டை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விடயம் குறித்து நீதி அமைச்சர் அவதானம் செலுத்த வேண்டும்.” – என்றார்.

# நாமல் ராஜபக்ஷவின் பெயரை பயன்படுத்தி சிலர் நிதி மோசடி

## மொட்டுக் கட்சியின் யாழ் அமைப்பாளர் கீதநாத் எச்சரிக்கை!



நாமல் ராஜபக்ஷவின் பெயரைப் பயன்படுத்தி நிதி மோசடிகள் இடம் பெற்று வருவதாகவும் அவ்வாறு பொய் கூறி வருபவர்களை நம்ப வேண்டாம் எனவும் பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்று வந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் நாமல் ராஜபக்ஷவின் பெயரைப் பயன்படுத்தி காணி பிடிப்பது, கட்டப் பஞ்சாயத்து செய்வது போன்ற செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களது வீடுகளுக்கு சென்று நாங்கள் விசாரிப்பது வழமை. அப்படி ஒரு வீட்டுக்கு சென்றமை சம்பந்தமாகத்தான் எனக்கு எதிராக மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வந்தது.

இதன்போது மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்றையதினம் (நேற்று) விசாரணைகளை மேற்கொண்ட வேளை அவருக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியமையோடு, நாங்கள் சென்று சந்தித்துக் கலந்துரையாடிய பாதிக்கப்பட்டவர்கள் எமக்கு எவ்வாறான முறைப்பாடுகளை அல்லது குற்றச்சாட்டுகளை வழங்கினர் என்பதைப் பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்தினேன்.

எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி இப்படியான மோசடிகள் செய்பவர்கள் தொடர்பாக மக்களாகிய நீங்கள் கட்டாயம் நீங்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய வேண்டும். அப்படி ஏதாவது உங்களுக்கு பயம் இருந்தால் நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

நாங்கள் யாழ்ப்பாணத்தில் முழுநேர அரசியலில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றோம். கடந்த காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள்தான் எமது கட்சியின் தோல்விக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன என நான் நினைக்கின்றேன். அந்த மாதிரியான குற்றச்சாட்டுகளை களைய வேண்டியது எனது கடமையாக இருக்கின்றது.

நாமல் ராஜபக்ஷ ஆள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றார், நாமல் ராஜபக்ஷ தங்கம் வியாபாரம் செய்கின்றார் என்பன போன்ற பொய்யான தகவல்களை சிலர் பரப்பி மோசடிகளை செய்து வருகின்றனர். இது தொடர்பாக என்னையும் சிலர் தொடர்பு கொண்டு, கேட்டு நாமல் ராஜபக்ஷ தங்கம் வியாபாரம் செய்கின்றாரா எனக் கேட்டுள்ளனர். நான் அப்படி எதுவும் இல்லை என அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன்.

இப்படியானவர்களை மக்களாகிய நீங்கள் நம்ப வேண்டாம். எமது கட்சியின் பெயரை பயன்படுத்தி இவ்வாறு குற்றச் செயல்களை செய்கின்றவர்களை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே மக்கள் பயமின்றி இது தொடர்பில் எம்மையோ பொலிஸ் நிலையத்தையோ தொடர்பு கொள்ளமுடியும்.

இவ்வாறான செயற்பாடுகளில் கட்சி உறுப்பினர்கள் யாராவது தொடர்புபட்டிருப்பது தெரிந்தால் அவ்வாறானவர்களுக்கு எவ்வித தயவு தாட்சண்யமுமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை உடனடியாக கட்சியில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பொலிஸார் ஊடாக சட்டரீதியான நடவடிக்கைக்கும் வழியேற்படுத்தப்படும் - என்றார்.

---

## ‘13’ தொடர்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தரப்பினருடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்றே நான் கூறினேன். மாறாக மாகாண சபை முறைமை எவ்வித கலந்துரையாடல்களுமின்றி ஒழிக்கப்படும் என நான் ஒருபோதும் கூறவில்லை.”

- இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் நடை முறையில் உள்ள அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்குக் கொண்டு வரவும், புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என அண்மையில் அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தச் செய்தியில், ”தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாகக் கூறிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகின்றது.

எனவே, பயனற்ற மாகாண சபை முறைமைக்குப் பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக் கூடியதும், அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையைப் பெற்றுக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசு செயற்படுகின்றது.

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது.” - என்று ரில்வின் சில்வா கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ரில்வின் சில்வா,

“வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைக்க 1987இல் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் தவறியுள்ளது. அதனால் வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைக்க மிகவும் நடைமுறைச்சாத்தியமானதும் சரியானதுமான தீர்வை முன்வைக்க வேண்டியுள்ளது. அத்தகைய மிகச் சிறந்த தீர்வை முன்வைத்து நடைமுறைப்படுத்தும் வரை 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் ஒழிக்கப் போவதில்லை என்றே நான் கூறினேன்.

மேற்படி புதிய தீர்வுகள் எதிர்காலத்தில் கலந்துரையாடலுக்கு இலக்காக்கப்படுகின்ற அரசமைப்பில் உள்ளடக்கப்படும். அந்தத் தீர்வு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படும். எனது செய்தி திரிபுபடுத்தப்பட்டுள்ளது.” - என்றார்.

# “இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன்”

## மேதகுவுக்கு வீரவணக்கம் செலுத்தி அர்ச்சுனா எம்.பி. நேற்று கன்னி உரை

என் உயிரிலும் மேலான என் இனத்தின் மானம் காத்த வீரத் தமிழன் இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படுகின்ற அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மேதகுவுக்கு வீரவணக்கம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தனது கன்னி உரையில் தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வீரவணக்கம் செலுத்திய அவர், மேலும் பேசுகையில்,

“என் உயிரிலும் மேலான என் இனத்தின் மானம் காத்த வீரத் தமிழன் இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படுகின்ற அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மேதகு அவர்களுக்கும், அவர் காட்டிய வழியில் உயிரைத் துச்சம் என மதித்து என் இனத்தின் மானம் காத்த வீர மறவர்




களுக்கும் அதேபோல் இதுவரை காலமும் நடந்த இந்தக் கோர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த சகல முஸ்லிம், சிங்கள, தமிழ் இளைஞர்களுக்கும் ஜே.வி.பி.யில் உயிர்நீத்த வர்களுக்கும் முதற்கண் எனது வீர வணக்கத்தையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்று கூறிவிட்டே தனது உரையை அர்ச்சுனா எம்.பி. நிகழ்த்தினார்.

## சமஷ்டி தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழரசுக் கட்சி எம்.பிக்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தனர்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகநாதன் குகதாசன், ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், இளையதம்பி சிறிநாத், துரைராசா ரவிகரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இது குறித்து சிறீதரன் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

“இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசினோம். சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே கவனத்தில் கொள்ள முடியும் என அவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருட இறுதிக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எம்மிடம் உறுதியளித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் அவர் எம்மிடம் எதுவும் கூறவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நீதிமன்ற உத்தரவின்படி நடத்த ஏற்பாடு செய்யப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

காணாமல்போனோர் விடயத்தில் தம்மால் உடனடியாக எதுவும் செய்ய இயலாது என்றும், படிப்படியாக அந்த விடயத்துக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் என்பவற்றின் செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து பேசுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணிகள் விடுவிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.” – என்றார்.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து முன்னெடுக்க வேறு வழியின்றி ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

அவர் இவ்விடயத்தில் முன்னர் செய்த விமர்சனங்கள் எல்லாவற்றையும் அவரே இப்போது குப்பை கூடைக்குள் கடாசி விட்டார் போலும்.

இந்த அரசின் நற்பெயருக்கு – கீர்த்திக்கு – வேட்டு வைப்பதற்கான வினை இரண்டு பொருள்களின் வடிவத்தில் வருவதாகத் தெரிகின்றது. ஒன்று – அரிசி. மற்றது – தேங்காய்.

ஏற்கனவே வடக்கு, கிழக்கில் கடும் மழை வெள்ளத்தினால் நெற்சாகுபடி பெருமளவில் அழிவைக் கண்டிருக்கின்றது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கணிசமான அளவு அரிசியை அரசு இறக்குமதி செய்யாவிட்டால் அரிசித் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக மாறும் என்று சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். ஆனால் அந்த விடயத்தில் அரசுத் தரப்பு மெத்தனமாகவே நடப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

தேங்காய் விலை 200 ரூபாவைத் தாண்டிவிட்டது.

அரிசி, தேங்காய் இரண்டுமே வறிய குடும்பங்களின் வயிற்றில் அடிக்கும் விவகாரங்கள். உரிய தீர்வை விரைந்து காணாவிட்டால் ஏழைகள் வயிற்றில் பற்றி எரியும் பசித் தீ ஆளும் தரப்பைச் சுட்டுப் பொசுக்கிப் பந்தாடி விடும் ஆபத்து உண்டு.

\+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியின் எட்டு எம்.பிக்களும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை நேற்று சந்திக்கும் விடயம் ஆரவாரமாக பேசப்பட்டது. ஆனால் சந்திப்பு புஸ்வாணமாக அடங்கிப் போனது.

இந்தச் சந்திப்புக்கு, அது பற்றிய குறிப்பு எடுக்கும் ஓர் உதவியாளரோடு மட்டுமே ஜனாதிபதி வந்திருந்தார். மொழிபெயர்ப்பாளர்கள், அதிகாரிகள், உதவியாளர்கள் எவரும் இல்லை. கடைசியாக மொழிபெயர்க்கும் பணி கூட சாணக்கியனின் தலையில்தான் விழுந்தது.

தேசிய இனப் பிரச்சினை பற்றி பேசுவதற்கு ஜனாதிபதி ஏன் இப்படி பொறுப்பின்றி வந்தார் என்று கேள்வி எழுந்தது. அதை ஜனாதிபதி செயலக வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டேன்.

“ஜனாதிபதி எங்கே தேசிய இனப் பிரச்சினை பற்றிப் பேச வந்தார்? வெள்ள நிவாரணம் குறித்து அவருடன் பேச வேண்டும் என்று தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் கேட்டார். அதற்கான சந்திப்புக்கு மட்டுமே ஜனாதிபதி வந்தார்.” – என அந்த வட்டாரங்கள் கூறின.

தேசிய இனப் பிரச்சினை விவகாரம் நேற்றைய சந்திப்பில் ஓரிரு எம்.பிக்களின் முணுமுணுப்போடு அடங்கி விட்டது. எம்.பிக்கள் ஆளுக்கொரு பாலம் கட்டித் தரக் கேட்டார்கள். டாக்டர்கள் நியமிக்க வேண்டும் என்றார்கள். அப்படி நானாவித கோரிக்கைகள் முன்வைக்கும் கூட்டமாக அது கடந்து போனது. அவ்வளவுதான்.

சம்பந்தன், சுமந்திரன் பாணியில் அவர்களிடம் பயிற்சி பெற்ற சாணக்கியன் இனப்பிரச்சினை விவகாரத்தில் சில அடிப்படையான விடயங்களை சிங்களத்தில் வலியுறுத்தியமையுடன் விடயம் அடங்கிவிட்டது.

மாகாண சபை தேர்தல் அடுத்த ஆண்டு பிற்பாதியில் நடக்கும் என்று கோடி காட்டினார் ஜனாதிபதி.

குறுப்பாக ஜனாதிபதியுடன் நின்று படம் எடுத்தமையைத் தவிர ஆக்கபூர்வமாக எதுவும் இந்தச் சந்திப்பில் இல்லை என்பதுதான் பெறுபேறு.

அண்மையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடி குழுவின் பேச்சாளராக சிறிநேசன் எம்.பியைத் தெரிவு செய்து ஆரவாரமாக அறிவித்திருந்தது. ஆனால் நேற்று ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களைச் சந்திக்க சிறிநேசனைக் காணவில்லை. அவர் சந்திப்பு முடிந்ததும் காரில் ஏறிப் பறந்து விட்டார். சந்திப்பில் மொழிபெயர்ப்பாளராக செயல்பட்ட சாணக்கியன்தான் ஊடகப் பேச்சாளர் பணியையும் நிறைவு செய்தார்.

உப்பு இல்லாத நேரம் தான் உப்பின் தேவை – ருசி – புரியும். நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும். சுமந்திரனின் மையும் அப்படித்தான்.

சுமந்திரன் என்றதும் நேற்றிரவு கொழும்பு – யாழ் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் சொன்ன ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

“உங்களின் முன்னாள் எம்.பி. சுமந்திரன் சாதாரண மனிதராகிவிட்டார். செவ்வாய் இரவு யாழ். – கொழும்பு பஸ்ஸில் கொழும்பிலிருந்து யாழ் வந்து, இப்போது (புதன் இரவு) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பஸ்ஸில் பயணிக்கின்றார்” என்றார் அவர்.

என்ன, ஏது என்று சுமந்திரனின் ஒரு ஜுனியரிடம் விசாரித்தேன். யாழ் நீதிமன்றங்களில் ஐந்து வழக்குகளின் தவணை. அதுதான் ஜனாதிபதி சட்டத்தரணி பஸ்ஸில் வந்து போயிருக்கின்றார் என்றார் அவர்.

அந்த ஐந்தில் ஒன்று ‘உதயன்’ நிறுவனத்திற்காக அவர் ஓஸியில் முன்னிலையாக வாதாட ஒப்புக் கொண்டு ஆஜராகி வரும் ஒரு டசின் வழக்குகளில் ஒன்று. அதற்கு நேற்று நீதிமன்றில் உதயன் தரப்புக்கான பதில் மனுவைத் தயாரித்து சமர்ப்பித்து விட்டு செல்கின்றார் எனக் கூறினார் அந்த ஜுனியர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இம்மாதத்தில் இந்தியா விஜயம் செய்கின்றார். அவர் போய் வந்த பின்னர் அவரே தமிழரசு கட்சியினரைத் தேடி அழைத்துச் சந்தித்து இருப்பார். அதுவரை தமிழரசு எம்.பிக்கள் அவசரப்படாமல் அமைதி காத்திருக்கலாம் என்பதுதான் விடயங்களை அவதானிக்கும் அரசியல் தரப்புக்களின் கருத்தாக இருக்கின்றது.

இந்த விடயத்தை தமிழரசு எம்.பிக்கள் – ஜனாதிபதி சந்திப்பு பற்றிய செய்தி நேற்றுக் காலை ஊடகங்களில் வெளியானதும் தமிழரசு கட்சியின் மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி அழைப்பு எடுத்து கட்சியின் பொதுச் செயலாளரும் தற்போதைய எம்.பியுமான மருத்துவர் சத்தியலிங்கத்திடம் கேட்டார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

“ஏன் இப்போது அவசரப்பட்டு இந்தச் சந்திப்பு? ஜனாதிபதி இந்தியா சென்று திரும்பிய பின்னர் சந்தித்திருக்கலாமே?” – என்று மாவை கேட்டாராம்.

ஆனால் மாவை எந்த அடிப்படையில் அப்படி ஒரு கேள்வியை சத்தியலிங்கத்திடம் கேட்டார் என்று தெரியவில்லை. நிச்சயமாகக் கட்சித் தலைவர் என்ற முறையில் கேட்டிருக்க மாட்டார். கேட்டிருக்க முடியாது.

கட்சித் தலைவர் பதவியில் இருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி தவிர்ந்த ஏனைய பதவி மற்றும் பொறுப்புக்களில் இருந்தும் தாம் விலகி விட்டார் எனத் தெரிவித்து சிறிதரன் எம்.பிக்கு முகவரியிட்டு, கட்சிப் பொதுச் செயலாளருக்குப் பிரதியிட்டு மாவை சேனாதிராஜா அனுப்பிய பதவி விலகல் கடிதத்தைத் தான் உரிய நடவடிக்கைகளுக்காக ஏற்றுக் கொண்டு விட்டார் எனக் கட்சிப் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் ஏற்கனவே மாவை சேனாதிராஜாவுக்கு – எழுத்தில் – பதிவு தபாலில் அறிவித்தல் அனுப்பி விட்டார்.

அதுவும் அந்த ராஜினாமாக் கடிதம் குறித்து விளக்கம், விசாரிப்புகளோடு மாவை சேனாதிராஜாவுக்கு தான் ஏற்கனவே அனுப்பி வைத்த முதல் பதிவு தபாலுக்கு பதில் ஏதும் கிடைக்காத நிலையிலேயே, ராஜினாமாக் கடிதம் உரிய நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்டுள்ளது என்ற பதிவு அஞ்சலை பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவுக்கு அனுப்பி இருந்தார்.

அதன்படி –

மாவை சேனாதிராஜா இப்போது மாஜி எம்.பி. என்பது போல கட்சியின் மாஜித் தலைவர்தான். மத்திய குழு, அரசியல் குழு போன்றவற்றின் உறுப்பினர் கூட அல்லர். சாதாரண கட்சி உறுப்பினர் மட்டுமே.

கட்சி யாப்பு மற்றும் வழக்கத்தின்படி சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கட்சியின் பதில் தலைவராக இப்போதைக்குக் கடமையாற்ற வேண்டும். கட்சியின் மத்திய குழு அதனை பின்னர் இறுதி செய்யும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த கட்சியின் கடைசி தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட தலைவரும் இப்போது பதவியில் இல்லை. பொதுச்செயலாளரும் இப்போது பதவியில் இல்லை. இரண்டுக்குமே பதில் நியமனங்கள்தான் – கட்சி வழக்கு முடிந்து அடுத்த தேசிய மாநாடு நடக்கும் வரை.

## ரணில் அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது தொடர்பான விபரங்களையும் சபையில் சமர்ப்பித்தார்.

எனினும், இவற்றைச் சிபாரிசு செய்த அரசியல்வாதிகள் யார் என்ற பெயர்ப்பட்டியல் வெளியாகவில்லை.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை விசேட கூற்றை முன்வைத்தே இதனைச் சமர்ப்பித்த அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த அரசில் அரசியல் இலஞ்சமாக பலருக்கு மதுபான சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை வெளியிடுவோம் எனக் கூறியிருந்தோம். அதற்கமைய அந்த விபரங்களை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன். இதனை சகலரும் அறிந்து கொள்ள முடியும்

இந்த விபரத்தின்படி மேல் மாகாணத்தில் 110 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளும், தென்மாகாணத்தில் 48, வடக்கு மாகாணத்தில் 32, கிழக்கு மாகாணத்தில் 22, மத்திய மாகாணத்தில் 45, வடமத்திய மாகாணத்தில் 14, ஊவா மாகாணத்தில் 30, வடமேல் மாகாணத்தில் 30, சப்ரகமுவ மாகாணத்தில் 30 என 361 மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று சில்லறை மதுபான விற்பனைக்கான அனுமதிகளாக கொழும்பு மாவட்டம் 2, கம்பஹா மாவட்டம் 8, களுத்துறை மாவட்டம் 8, காலி மாவட்டம் 9, மாத்தறை மாவட்டம் 5, அம்பாந்தோட்டை மாவட்டம் 5, யாழ்ப்பாணம் மாவட்டம் 5, கிளிநொச்சி மாவட்டம் 16, வவுனியா மாவட்டம் 2, மன்னார் மாவட்டம் 2, திருகோணமலை மாவட்டம் 4, மட்டக்களப்பு மாவட்டம் 1, அம்பாறை மாவட்டம் 5, கண்டி மாவட்டம் 11, மாத்தளை மாவட்டம் 6, நுவரெலியா மாவட்டம் 8, அனுராதபுரம் மாவட்டம் 4, பொலநறுவை மாவட்டம் 3, புத்தளம் மாவட்டம் 6, குருநாகல் மாவட்டம் 8, பதுளை மாவட்டம் 9, மொனராகலை மாவட்டம் 7, இரத்தினபுரி மாவட்டம் 6, கேகாலை மாவட்டம் 2 என 172 அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்படவில்லை.” – என்றார்.



# ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளருக்கு இடையில் சந்திப்பு

அரசாங்கத்தின் ஊடநயஎ ளுசை டுயமெய வேலைத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவிகள் வழங்கப்படுமென உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஷ்வரன் ஐயர் தெரிவித்தார்.

உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்த உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் எதிர்காலத்திலும் அவ்வண்ணமே முன்னெடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அதேபோல் புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டம், கிராமிய வறுமையை ஒழித்தலுக்கான திட்டங்கள், பொருளாதார டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்துக்கு இணையான டிஜிட்டல் அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத் திட்டம் என்பன குறித்தும் ஜனாதிபதி நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கு மக்கள் நீண்டகாலமாக முகம் கொடுத்திருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவது குறித்தும் இதன்போது பேசப்பட்டது.

இந்நாட்டில் விவசாயம், மீன்பிடித்துறை, சுற்றுலா, கல்வி மற்றும் சுகாதார துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸசாநாயக்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்கும் வகையில் முதற்கட்டமாக, இந்நாட்டு ஆலோசனைக் குழுவொன்றுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அரசாங்கத்தின் ஊடநயஎ ளுசை டுயமெய வேலைத்திட்டத்துக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இதன்போது தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த,நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப் பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.








CTCC Canadian Tamils' Chamber of Commerce
கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

# COMMUNITY MEETING



## ON ADDRESSING RECENT JEWELRY STORE ROBBERIES

a public meeting to foster dialogue and collaboration among the police, city councilors, jewelry store owners, and other concerned businesspeople in our community.

சமீபத்தில் தமிழ் நகைக்கடைகளில் நடந்த கொள்ளை சம்பவங்கள்குறித்தும் அதையொட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் போலீஸ், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகை கடை உரிமையாளர்கள், மற்றும் தமிழ் சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ளும் சமூகக் கூட்டம்.

FRIDAY, DECEMBER 6TH, 2024
AT 3:00 PM
CTCC BUSINESS CENTRE
80 TRAVAIL ROAD, UNIT 1,
MARKHAM

JOIN US:
416-335-9791
info@ctcc.ca
www.ctcc.ca





Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# தமிழரசு வீறுநடை போடும்!

## சத்தியலிங்கம் எம்.பி. சபதம்



"நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற விதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்காலத்தில் செயற்படும். வீறுநடை போடும்."

– இவ்வாறு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் எம்.பி., கட்சி உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தமிழரசுக் கட்சி சென்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டத் தமிழர்களும் அங்கீகரித்த ஒரே கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு பொய்யான பிரசாரங்களுக்கு மத்தியிலும் மக்களால் வழங்கப்பட்டுள்ள இந்த அங்கீகாரத்துக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற விதத்தில் தமிழரசுக் கட்சி எதிர்காலத்தில் செயற்படும். வீறுநடை போடும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு எவ்வித பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் தமிழரசுக் கட்சி நேர்மையுடன் குரல் கொடுக்கும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது மக்கள் பல்வேறு குறைபாடுகள் பற்றி எம்மிடம் தெரிவித்திருக்கின்றார்கள். அவற்றை நாம் மிகுந்த கரிசனையுடன் பரிசீலனைக்கு எடுத்து அவற்றைக் களைந்து முன்நகர வேண்டும். அதை நாம் செய்வோம்."

– என்றார்.



# அரசின் கொள்கை பிரகடனம் தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

10ஆவதுபாராளுமன்றத்தில்அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்வைத்திருந்தார்.

அது தொடர்பான விவாதம் நேற்று முன்தினமும், நேற்றும் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் இந்த கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை நேற்று மாலை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

# அனைவரும் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு உரிமையுண்டு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

"அனைவருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடு."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமீபத்தில் மாவீரர்கள் நாள் தொடர்பில் பல கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

அனைவருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடு.

தற்போதும் இதுவே எங்கள் நிலைப்பாடு வடக்கிற்கும் தெற்கிற்கும் இந்த நிலைப்பாடு பொருந்தும்.



எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளதால் நினைவுகூரலின் போது அவர்களின் கொடிகள் இலச்சினைகளை பயன்படுத்த அனுமதியில்லை.

இதேவேளை சமூக ஊடகங்களை பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் தெற்கில் பிரச்சாரமொன்று முன்னெடுக்கப்பட்டது, இந்த பிரச்சாரத்திற்கு அவர்கள் 2018 – 2022 இல் எடுக்கப்பட்ட வீடியோக்களை பயன்படுத்தினார்கள்.

இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை செய்துள்ளனர்."– என்றார்.

# நல்லாட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும்

## அநுர அரசிடம் சுமந்திரன் இடித்துரைப்பு



"மைத்திரி காலத்தில் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் ஜே.வி.பி. கட்சியின் பங்களிப்பு மிகவும் பாரியது. அந்த அரசமைப்பை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அவர்களுக்கு இருக்கின்றது. அதில் முன்னேற்றகரமான மேலும் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் செய்து அதனை நிறைவேற்ற வேண்டியது அவர்களது பொறுப்பு."

– இவ்வாறு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் தமது உரையின்போது மேலும் குறிப்பிட்டதாவது:–

"அறுதிப் பெரும்பான்மையுடன் புதிய அரசு பதவிக்கு வந்துள்ளது. கடந்த கால அரசுகளைப் போல் அல்லாது இவர்கள் பல்வேறு விடயங்களிலும் புதிய அணுகுமுறையுடன் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

குறிப்பாக தமிழர்களது நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்களும் இவர்களுக்கு வாக்களித்துள்ளார்கள். அந்த நம்பிக்கைக்கு ஏற்ற விதத்தில் அரசு செயற்படவேண்டும்.

இந்த விடயங்களில் எமது கட்சி அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும். மைத்திரி காலத்தில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு நீண்ட பிரயத்தனங்களுக்குப் பின்பே இறுதி செய்யப்பட்டு நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் ஆக்கத்தில் ஜே.வி.பி. கட்சியின் பங்களிப்பு மிகவும் பாரியது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களில் அவர்களது அதீத ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. இறுதி செய்யப்பட முன்பு தமது கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஆலோசித்து அனுமதி பெற எம்மிடம் அவகாசம் கேட்டனர். அப்போது சம்பந்தன் ஐயா அதனை ஏற்றுக்கொண்டார். பின் அவர்களது கட்சியினரின் அனுமதி பெற்று எம்மிடம் சம்மதம் தெரிவித்தார்கள்.

எனவே, அந்த அரசமைப்பை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கின்றது. அதில் முன்னேற்றகரமான மேலும் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் செய்து அதனை நிறைவேற்ற வேண்டியது அவர்களது பொறுப்பு." – என்றார்.

# மெண்டிஸ் நிறுவனத்தின் மதுபான உற்பத்திக்கான அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டன



அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரித் தொகையை செலுத்தாமையால் டபிள்யூ.எம். மெண்டிஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 10 மதுபான உற்பத்தி அனுமதிப்பத்திரங்களில் 8 பத்திரங்களை நேற்று முதல் இடைநிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று வெளிக்கொணரப்பட்டது.

டபிள்யூ.எம். மெண்டிஸ் நிறுவனம் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய முழுமையான நிலுவை வரித் தொகையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தாவிட்டால் தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துகலால்வரித்திணைக்களத்தால் தமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி டபிள்யூ.எம். மெண்டிஸ் நிறுவனம் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்காது தள்ளுபடி செய்யவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.



# பாதுகாப்புக்கான துப்பாக்கிகளை ஒன்றாக வரையறுக்க தீர்மானம்

பாதுகாப்பின் நிமித்தம் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை குறைந்தபட்சம் ஒன்றாக வரையறுத்து வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

துப்பாக்கிகள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நபரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது குறித்து ஆய்வு நடத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் உண்மைத் தன்மையின் அடிப்படையிலேயே மேலும் துப்பாக்கிகளை வழங்குவதா, இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினால் இந்த பாதுகாப்பு ஆய்வு முன்னெடுக்கப்படும்.

துப்பாக்கி உரிமையாளர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆய்வில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏதும் இல்லாத பட்சத்தில் அவர்களிடமுள்ள துப்பாக்கிகளை மீளப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இன்னும் வாய்ப்புண்டு

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் உட்பட தமிழர் பிரதேசங்களில் தாம் பெற்ற வாக்குகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளின் பெறுபேறு குறித்து ஆளும் தேசிய மக்கள் சக்தி தவறாகப் புரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஆக 27 ஆயிரம் வாக்குகளை பெற்ற அநுர குமார திஸநாயக்க தரப்பினால் அடுத்த ஒன்றரை மாதங்களில் வந்த பொதுத் தேர்தலில் 80 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெற முடிந்திருக்கிறது. வெறுமனே ஒன்றரை,இரண்டு மாதங்களுக்குள் அத்தரப்புக்கு கிடைத்த வாக்குகள் யாழ் மாவட்டத்தில் மட்டும் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.

இவ்வளவு வேகமாக கிட்டிய ஆதரவு, அதைவிட வேகமாகக் கரைந்து விட வாய்ப்பிருப்பதை ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை காலமும் பல்வேறு தென்னிலங்கைக் கட்சிகளிடம் நீதி, நியாயமான தீர்வுக்கு எதிர்பார்த்துக் களைத்துப் போன தமிழ் மக்கள், புதிய ஒரு வாய்ப்பைத் தருவதற்கு தேசிய மக்கள் சக்திக்கு சந்தர்ப்பம் வழங்கி இருக்கிறார்கள் என்பதை ஆளும் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஜனாதிபதியும் அவர் தரப்பினரும் அதனை உணர்ந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான வெற்றியை ஈட்டி, தமிழர் தரப்பின் பிரதிநிதித்துவத்தை வென்று விட்டோம் என்ற இறுமாப்போடு அவர்கள் செயல்படுகிறார்கள்.

ஆயினும், அந்த ஆதரவை வைத்துக் கொண்டு தம் இஷ்டப்படி - தமிழருக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக - புதிய அரசமைப்பைக் கொண்டு வர அவர்கள் முயலலாம் எனச் சந்தேகம் கிளம்பி உள்ளது. அவர்களது ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா போன்றோர் தெரிவிக்கும் கருத்து அத்தகைய சந்தேகத்தைத்தான் தமிழர்கள் மத்தியில் கிளப்பி இருக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தமிழர் தரப்பின் நீதி,நியாயமான கோரிக்கைகளை - அபிலாசைகளை - எதிர்பார்ப்புகளை - நிறைவு செய்யாமல், தன்னிஷ்டப்படி அரசு செயற்பட முனைந்தால் தமிழர்கள் தரப்பின் பிரதிபலிப்பு காட்டமாகத்தான் இருக்கும்.

1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பும், பின்னர் 1978 ல் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி செய்யும் அரசமைப்பும் தமிழர்களின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டவை அல்ல. தென்னிலங்கை பேரினவாதிகளால் அவை தமிழர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டவை. அந்த யாப்புகளின் தயாரிப்புகளில் தமிழ் பிரதிநிதிகள் பங்குபற்றவில்லை. அவர்களின் யோசனைகள், கருத்துக்கள், பிரேரணைகள் உள்வாங்கப்படவில்லை.

ஆனால், இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு தனக்கு அத்தகைய நெருக்கடி - பின்னடைவு - இல்லை என்று அது கருதுகிறது. தமிழர் பிரதேசத்தில் இருந்து கணிசமான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தாங்கள் பெற்றிருப்பதால், அந்த ஆதரவோடு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதன் மூலம், அந்த அரசமைப்பு தமிழர்களின் இணக்கத்தோடும் கொண்டு வரப்படுவதாகக் காட்ட முடியும் என்று அவர்கள் மனப்பால் குடிக்கிறார்கள்.

ஆனால் முன்னைய அரசமைப்புகள் போல அல்லாமல், இந்த அரசமைப்பைக் கொண்டு வருவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பை ஒட்டியே, அதன் ஏற்பாடுகளுக்கு அமையவே, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட முடியும். அதன் படி இத்தகைய புதிய அரசமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

தமிழர் தாயக பிரதேசத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் கிடைத்த வெற்றியை வைத்துக்கொண்டு, புதிய அரசமைப்பை தமிழர் தரப்பின் இணக்கத்தோடு தயாரித்ததாக இந்த அரசு காட்டினாலும், இறுதியில் சர்வஜன வாக்கெடுப்புக்குப் போகின்ற போது தமிழ் மக்கள் தங்கள் தாயக பிரதேசத்தில் தங்களது இறுதித் தீர்ப்பை வழங்குவதற்கு வாய்ப்பு உண்டு என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது.

ஜனாதிபதி தேர்தலில் அளித்த வாக்குகளுக்கு மாறாக மூன்று மடங்கு வாக்குகளை 2 மாதங்களுக்குள் பொதுத் தேர்தலில் வழங்கிய தமிழ் மக்கள், மீண்டும் சர்வஜன வாக்கெடுப்பில் தங்களின் உள்ளக் கிடக்கை அறுதியிட்டு வெளியிட வாய்ப்பு உண்டு என்பதை ஆளும் தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பார்த்தால் கூட, தமிழர் தாயகத்தில் பிரிந்து நின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டால் ஆளுங் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை அடிபட்டு போய்விடும் என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

ஆகவே தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறி, அவர்களுக்கு திருப்தி தராத - அவர்களை ஏமாற்றுகின்ற - வடிவிலான அரசமைப்பு ஒன்றை ஆளும்தரப்பு கொண்டு வந்தால், தக்க பதிலடி தமிழர் தரப்பிலும் இருந்து - தமிழர் தாயகத்திலிருந்து - சர்வஜன வாக்கெடுப்பின் போது அரசுக்குக் கிட்டும் என்பதை அரசு உணர வேண்டும்.

முன்னைய இரண்டு யாப்புகள் போலவே இப்போது அரசு கொண்டுவரக்கூடிய புதிய அரசமைப்பும் தமிழர் மீது வல்வந்தமாக திணிக்கப்பட்டது என்ற தீர்ப்பை - முடிவை - சர்வஜன வாக்கெடுப்பின் போதும் தமிழர்கள் வழங்கி விடக் கூடும் என்ற எச்சரிக்கையை முற்கூட்டியே ஆளும் தரப்புக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.




# மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர் மன்றத்தின் புதிய தலைவராக சரோஜா சாவித்ரி நியமனம்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்தின் புதிய தலைவராக நியமிக் கப்பட்டுள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் மன்றம் முதற்தடவையாக கூடியுள்ளது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப் பினர்கள் மன்றத்தின் இரண்டு பிரதித் தலைவர்களும் இதன்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.








# மீன்களின் விலை சடுதியாக அதிகரிப்பு

ஃபெங்கல் புயல் காரணமாக கடல் சார் ஊழியர்கள் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், மீன்களின் விலை களும் பாரியளவில் அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், அவற்றை விற்பனை செய்வதிலும் சிரமத்தை எதிர்நோக்கு வதாக மீன் விற்பனையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இதன்படி, பேலியகொடை மத்திய மீன் சந்தையில், ஒரு கிலோகிராம் தலபத் 2,400 ரூபா முதல் 2,500 ரூபா வரையிலும், பரவை மீன் ஒரு கிலோ கிராம் 1,400 ரூபாவுக்கும், லின்னா ஒரு கிலோ கிராம் 1000 ரூபா முதல் 1,100 ரூபாவுக்கும், சாலை மீன் ஒரு கிலோகிராம் 450 ரூபாய் முதல் 500 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையிலும் விற்பனை செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

# களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான 3 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன

## சபையில் நீதி அமைச்சர் தெரிவிப்பு



களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்காக அடுத்த காலாண்டுக்குள் 3 புதிய சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

“களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டல், நிதிக் குற்றங்களைத் தடுத்தல், கடனாளிகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட குற்றச் செயல்கள் சட்டமூலம், மீட்பு, புனர்வாழ்வு, நொடிப்பு நிலை சட்டமூலங்கள் மற்றும் கணக்காய்வுச் சட்டத் திருத்தங்கள் என்பனவே அடுத்த காலாண்டுக்குள் சமர்ப்பிக்கப்படும்.” – என்றார்.

# வருமான வரி விவரத்திரட்டை சமர்ப்பிக்க அவகாசம் நீடிப்பு

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விவரத்திரட்டை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இறைவரித் சட்டத்தின் ஏற்பாட்டுக்கமைய வருமான வரி செலுத்துனர்கள் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டு முடிவடைந்த திகதியிலிருந்து 8 மாதங்களுக்குள் வருமான வரி விவரத்திரட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

அதற்கமைய, 2023 - 2024 ஆம் ஆண்டு வரி மதிப்பீட்டாண்டுக்கான விவரத்திரட்டை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியாகக் கடந்த நவம்பர் 30ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும், கடந்த நவம்பர் 23 ஆம் திகதியிலிருந்து நாட்டில் சீரற்ற கால நிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் வரி செலுத்துவோர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்கள் வரி விவரத்திரட்டை சமர்ப்பிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை கருத்திற்கொண்டு 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான வரி மதிப்பீட்டாண்டுக்கான விபரத்திரட்டை எதிர்வரும் 7 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, முன்னதாக வருமான வரி விபரத்திரட்டை சமர்ப்பிப்பவர்களுக்கு எந்தவித அபராதம் விதிக்கப்படாது என்பதுடன், வழக்கு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியில் விபத்து





கொடிகாமம் – புலோலி பருத்தித்துறை பிரதான வீதி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கை மின்சார சபையின் உயர் மின்னழுத்த மின் கம்பம் முறிந்து விழுந்ததில் மின் சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதன்காரணமாக கொடிகாமத்தின் வரணி, எருவன், குடமியன் உள்ளிட்ட பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மேற்படி வீதி ஊடாக கொடிகாமம் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த டாடா பிக்கப் ரக வாகனத்தை முந்திச்செல்ல முயன்ற டிப்பர் ரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பிக்கப் வாகனத்தை மோதித் தள்ளியதன் காரணமாக அந்த பிக்கப் உயர் மின்னழுத்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மின் கம்பம் முறிந்து வீதியின் நடுவே சாய்ந்து விழுந்ததை அடுத்து மின் துண்டிப்பு இடம்பெற்றுள்ள நிலையில், தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித பாதிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த விபத்து தொடர்பில் மின்சார சபைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து உடனடியாக குறித்த பகுதிக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு மீளவும் மின் கம்பம் நாட்டி மின் இணைப்பு வேலைகள் முன்னெடுப்பட்டன.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் ரக வாகனம் அங்கிருந்து தப்பிச்சென்றிருந்த நிலையில் கொடிகாமம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பங்களாதேஷை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

## தமிழிசை உள்ளிட்ட 500 பேர் கைது





பங்களாதேஷ் அரசை கண்டித்து சென்னை எழும்பூரில் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழிசை உள்ளிட்ட பா.ஜ.கவினர் 500 பேர் கைது செய்யப்பட்டனர்.

பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், இந்து ஆன்மிக தலைவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து பங்களாதேஷ் இந்து உரிமை மீட்பு குழு சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகன், மாநில துணை தலைவர் கரு. நாகராஜன், மாவட்ட தலைவர் சாய் சத்யன் உள்ளிட்ட பா.ஜ.கவினர், இந்து அமைப்பினர், ஆன்மிகவாதிகள் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது, பங்களாதேஷ் அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில், அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக 500 இற்கும் மேற்பட்ட பா.ஜ.கவினர், இந்து அமைப்பினரை பொலிஸார் கைது செய்து, பஸ்கள் மூலம் அழைத்து சென்று சென்னை பெரியமேட்டில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் அடைத்தனர்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் தமிழிசை சவுந்தரராஜன் கூறும்போது, “பங்களாதேஷில் இந்துக்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வரும் மத அடிப்படைவாதிகளுக்கு எதிராக வங்கதேச அரசை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளோம்.

குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிராக மாதக்கணக்கில் அனுமதியின்றி போராட்டம் நடத்தியவர்கள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்காத தமிழக பொலிஸ் தான், பங்களாதேஷில் பாதிக்கப்பட்ட இந்துக்களுக்காக ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய தேச பக்தர்களை இன்று கைது செய்திருக்கிறது.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான பி.எப்.ஐ-க்கு ஆதரவாக மனித சங்கிலி போராட்டம் நடத்தியவர்கள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்காத தமிழக பொலிஸ்தான், பங்களாதேஷ் இந்துக்களுக்காக அறவழியில் போராட்டம் நடத்திய தேசாபிமானிகளை இன்று கைது செய்திருக்கிறது. பாதிக்கப்பட்ட இந்துக்களுக்காக போராடுவதற்கு கூட தமிழகத்தில் அனுமதி மறுக்கப்படுவது தொடர்கிறது. இந்த நிலை விரைவில் மாறும்.” - என்றார்.

# மகாராஷ்டிர முதல்வராக பதவியேற்க தேவேந்திர ஃபட்னாவிஸ்’க்கு அழைப்பு




மகாராஷ்டிர முதல்வராக இன்று பதவியேற்க தேவேந்திர ஃபட்னாவிஸ்’க்கு ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

மகாராஷ்டிராவில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதை அடுத்து, முதல்வர் யார் என்பதை அறிவிப்பதில் இழுபறி நிலவி வந்தது.

இந்நிலையில், மும்பையில் நேற்று கூடிய பா.ஜ.க. எம்.எல்.ஏக்களின் கூட்டத்தில் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவராக தேவேந்திர ஃபட்னாவிஸ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குஜராத் முன்னாள் முதல்வரும் மத்திய பார்வையாளருமான விஜய் ரூபானி இதனை அறிவித்தார். அப்போது பேசிய மற்றொரு மத்திய பார்வையாளரான நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மகாராஷ்டிராவை நாட்டின் முதல் மாநிலமாக நாம் உருவாக்குவோம் என குறிப்பிட்டார்.

இதையடுத்துப் பேசிய தேவேந்திர ஃபட்னாவிஸ் “எந்தவொரு மத புத்தகத்தையும் விட, இந்திய அரசமைப்புச் சட்டமே தனக்கு முக்கியமானது என்பதை பிரதமர் நரேந்திர மோடி எப்போதும் வலியுறுத்துவார். சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதனுடன் மகத்தான பொறுப்பும் வந்துள்ளது. இதை நான் அங்கீகரிக்கிறேன்” என குறிப்பிட்டார்.

அமைச்சரவை தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த விஜய் ரூபானி, “இது தொடர்பாக கூட்டணி கட்சிகளுடன் கலந்து பேசி முடிவு செய்யப்படும். மகாயுதி கூட்டணியில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அனைத்தும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது” என கூறினார்.

பாஜக சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக தேவேந்திர ஃபட்னாவிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து அவரை ஆதரித்து சிவ சேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கையெழுத்திட்ட கடிதம் தயாரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நிர்மலா சீதாராமன், விஜய் ரூபானி, தேவேந்திர ஃபட்னாவிஸ், ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் உள்ளிட்டோர் ராஜ்பவனுக்குச் சென்று ஆளுநரைச் சந்தித்தனர். அப்போது தேவேந்திர ஃபட்னாவிஸ் முறைப்படி ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதத்தை அளித்தார். இதனையடுத்து, ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.





# காசா உணவு விநியோக மையம் மீது இஸ்ரேல் தாக்குதல்; 4 குழந்தைகள் பலி

மத்திய காசாவில் உள்ள நுசிராத் அகதிகள் முகாமில் உள்ள உணவு விநியோக மையம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளன.

இந்நிலையில், காசாவில் உள்ள குடும்பங்கள் தொடர்ந்து 'மோசமான' நிலைமைகளை எதிர்கொள்கின்றன என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் சுமார் 1,200 பேரை படுகொலை செய்து, 200 இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக ஹமாஸ் தீவிரவாத அமைப்பினர் பிடித்துச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், அவர்கள் தங்கியிருக்கும் காசாவில் தீவிர தாக்குதலை நடத்திவருகிறது. இதில், இதுவரை 43,500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீன மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், வடக்கு காசாவின் பெய்ட் லஹியா நகரில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனையின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியதில் மூன்று மருத்துவர்கள் காயமடைந்துள்ளனர். இது அண்மையில் மருத்துவ கட்டமைப்பின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய ஐந்தாவது தாக்குதல் என கூறப்படுகிறது.

மேலும், காசாவின் போர் பதற்றங்களுக்கு மத்தியில் மக்கள் உணவுக்காக பல மைல்கள் நடந்து செல்கின்றனர். ஒவ்வொரு நாளும், கடைகள் திறக்கப்பட்ட பிறகு ரொட்டி துண்டுகளை வாங்க மக்கள் கூட்டம் கூட்டமாக வரிசையில் நிற்கின்றனர்.

கிட்டத்தட்ட பஞ்சத்தில் விளிம்பில் வாழும் மக்கள், உணவு பொருள்களின் விலை வேகமாக உயர்ந்துள்ளது என கவலை தெரிவிக்கின்றனர். இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், பாதிக்கும் மேற்பட்ட கட்டடங்கள் அழிக்கப்பட்ட நிலையில், மா ஆலைகள், மாவை சேமித்து வைக்கும் கிடங்குகள் மற்றும் தொழில் துறை வெதுப்பகங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளதால் செயல்பட முடியவில்லை.

மற்றொரு பக்கம் இஸ்ரேல், காசாவுக்கான மனிதாபிமான உதவிகளை தடுப்பதாக குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. ஆனால் இஸ்ரேல் வழக்கம்போல இதனை மறுத்துள்ளது. காசாவில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளை பெறகூட போராடும் சூழல் ஏற்பட்டுள்ளது. உடனடி போர்நிறுத்தம் தேவை என ஐ.நா வருத்தம் தெரிவித்துள்ளது.

# தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக தொடர்ந்தும் இடம்பெறும் போராட்டம்





தென் கொரிய ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி யூன் சுக் யோல் பதவியிலிருந்து விலகினாலும் விலகாவிட்டாலும் தாங்கள் அவரை பதவியிலிருந்து விலக்குவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி யூன் சுக் யோல் பதவி விலகியதைத் தொடர்ந்து தாமும் பதவி விலகுவதாக தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சரும் அறிவித்துள்ளார்.

அவசரகால இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி யூன் சுக் யோல் நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் அவர் மீது குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

'வட கொரியாவின் கம்யூனிச சக்திகளிடமிருந்து' நாட்டைப் பாதுகாக்கவும் அரசுக்கு எதிரான சக்திகளை ஒழிக்கவும் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தவதாக தென் கொரிய ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும், அவரது பிரகடனத்திற்குப் பின்னர் இரண்டு மணி நேரத்திற்குள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை மீறி, நாடாளுமன்றத்தில் கூடி அவரது முடிவைத் தடுப்பதற்கு வாக்களித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்துக்கு வெளியில் பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், அமைதியின்மையும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், திடீரென அமுல்படுத்தப்பட்ட அவசரகால இராணுவச் சட்டத்தைத் தளர்த்துவதாக தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் அறிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். மேலும் உங்கள் அனுபவம் விரிவடையும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்படும் என்பதால் வார்த்தைகளில் கவனம் தேவை. பொறுமையாக இருக்க வேண்டும். விமர்சனங்களை விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் இருவரிடையே காணப்படும் குறைந்த புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுக இயலாது.

இன்று பணம் சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுக்க ஏதுவான நாள் அல்ல. புதிய முயற்சிகள் தவறான பலன்கள் மற்றும் நஷ்டத்தை ஏற்படுத்தலாம்.

தலைவலியால் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியமாய் இருக்க அமைதியான மன நிலையில் இருக்க வேண்டும்.




உங்கள் லட்சியங்களை அடைய கடுமையாகப் போராட வேண்டும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தி அமைதியாக இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தள்ளிப்போடுவது நல்லது.

பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது.

குடும்ப நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

தந்தையின் உடல் நிலை திருப்திகரமாக இருக்காது. பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்கில் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி காணப்படும். விரைந்து முடிவெடுக்கும் வகையில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும்.

பணிகளை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள். சக பணியாளர்களுடன் உறவு நல்ல முறையில் இருக்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழா ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப் பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பிரியமானவர்களின் வீட்டு விசேஷத்திற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மனோபலம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் அன்றாட செயல்களை கவனமாக செய்ய வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் மனதில் சஞ்சலமான எண்ணங்கள் காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் மனக் கட்டுப்பாட்டை அடையலாம்.

அதிகரிக்கும் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் போதுமான பணம் காணப்படாது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களை பாதிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டிய நாள். இன்று நேர்மறையான பலன்கள் கிடைக்க உங்கள் உணர்வுகளை கண்காணிக்க வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் சவால்கள் காரணமாக ஓய்விற்கு நேரம் கிடைக்காது. திட்டமிட்டு பணிகளை முறையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.

குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக அதிக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்றைய தினம் யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று சராசரியான பலன்களே காணப்படும்.

இன்று பணியிடத்தில் வெற்றி காண்பதற்கு கடினமான முயற்சி வேண்டும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.

உணவுமுறையில் கவனம் தேவை. உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் லட்சியங்களை அடைந்து மகிழ்ச்சி காணும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து நல்லாதரவு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு அன்பை வளர்ப்பீர்கள்.

உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதிக பணம் சம்பாதிக்கவும் சேமிக்கவும் அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்கும்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் வளர்ச்சிக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று உங்கள் திறமைகளை வெளிக்கொணரலாம். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும்.

சகபணி யாளர்களின் நல்லாதரவு பெருகும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். இதனால் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுவாக இருக்கும்.

பொருளாதார பாதுகாப்பு காணப்படும். இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். திருப்தியான நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2024




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். சாதகமற்ற பலன்களை தவிர்க்க பிறருடன் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும். இசை கேட்பது, பொழுதுபோக்கு நிகழ்சிகளில் ஈடுபடுவது மனதிற்கு ஆறுதல் தரும்.

சக பணியாளர்களால் சில இடையூறுகளை சந்திக்க நேரும். பணிச்சூழல் சுமுகமாக இருக்காது. அனுசரணையான போக்கு தேவை.

துணையுடன் நயமாகவும் அமைதியாகவும் உரையாட வேண்டும். குடும்ப பிரச்சினை பற்றிய விவாதங்கள் சுமுகமாக இருக்காது. உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். அதிகரிக்கும் செலவுகள் காரணமாக உங்களால் சேமிக்க இயலாது.

ஓய்வெடுப்பதற்கு நேரம் கிடைக்காது.




இன்று உங்களுக்கு இனிமையான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்க இந்நாளை பயன்படுத்துங்கள். அது உங்களுக்கு நல்ல பலன் தரும். நம்பிக்கை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஆதரவும், மேலதிகாரிகளின் நன்மதிப்பும் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சி கொள்வார்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் செயல்களில் தாமதம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திக்க முறையாக திட்டமிட வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலை காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இதனால் உங்கள் ஆர்வம் குறைவது போல தோன்றும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை நன்கு பாதிக்கும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக உங்கள் பணம் விரயமாகும். பண சம்பாத்தியமும் குறைவாக காணப்படும்.

கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நற்பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்களின் ஆன்மீக ஈடுபாடு நற்பலன்களை அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்களின் சிறந்த செயல்திறன் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் அன்பான நேர்மையான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு வளரும்.

இன்று நிதிநிலையில் பாதுகாப்பு காணப்படும். வங்கியிருப்பு கணிசமாக உயரும். கையிலிருக்கும் பணத்தை பயனுள்ள நோக்கங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் உற்சாகமாக காணப்படுவீர்கள்.

